செய்தி வெளியீடு எண்.701 நாள். 25.8.2008

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கைத்தறித் துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் செயல்படும் விதம் குறித்து 25.08.2008 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகத்தில் ஆய்வு மேற்கொண்டார். அவ்வாய்வின்போது தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் செயல்படாத நிலையில் உள்ள 13 கூட்டுறவு நூற்பாலைகளின் தற்போதைய நிலை குறித்தும், இயங்காத நூற்பாலைகளில் எந்தெந்த நூற்பாலைகளை இயக்க முடியும் என்ற சாத்திய கூறுகள் குறித்தும் அமைச்சர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டது.

இதுமட்டுமன்றி, செயல்பட்டு வரும் 5 கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்படும் திறன் பற்றியும், அவைகளை மேலும் திறம்பட இயக்குவது பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி படிப்படியாக இலாபத்தில் செயல்பட வைப்பதற்கு குறைந்தபட்ச முதலீட்டில் நவீனப்படுத்துவதற்கும், மேலும், புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாட்டினை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டது.

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு நூற்பாலைகளின் ஆட்சியர்களின் கருத்தினைக் கேட்டறிந்து இந்த ஆலைகளின் செலவினங்களைக் குறைத்து, இலாபமீட்டும் வகையில், திறம்பட இயக்குவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் பொங்கல் 2009 இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்குத் தேவையான வேட்டி சேலைகள் உற்பத்தி முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 159.44 இலட்சம் சேலைகள் மற்றும் 158.80 வேட்டிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி 15.12.2008–க்குள் உற்பத்தி செய்து முடித்து 31.12.2008–க்குள் வருவாய்த் துறையிடம் வழங்கப்பட்டுவிடும் எனவும், இவை 1.1.2009 முதல் மாவட்ட ஆட்சியர்களால் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படும் எனவும் தெரிவித்தார். தற்போது 62.74 இலட்சம் சேலைகளும், 58.21 இலட்சம் வேட்டிகளும் தயார் நிலையில் உள்ளது எனவும் அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கோவை மாவட்டத்தில் கடந்த 16.08.2008 முதல் விசைத்தறி நெசவாளர்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதன் காரணமாக இலவச வேட்டி சேலை உற்பத்தி பாதிப்படையாத வண்ணம் இலவச வேட்டி சேலைத் திட்டத்திற்குத் தேவைப்படும் வேட்டி சேலைகள் உற்பத்தியினை வரும் 15.12.2008–க்குள் திட்டமிட்டபடி முடிக்க தக்க நடவடிக்கைகள் கைத்தறி மற்றும் துணிநூல் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**